ආයතනයේ නම: ආරක්ෂක අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர்: பாதுகாப்பு அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்டு நடவடிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

Name of the Institution: Ministry of Defence

Submission of Observations of Hon. Minister and Steps Taken with Regard to the Reports Tabled by the Committee on Public Accounts in Terms of Standing Order No:119(4)

அரச பொதுக் கணக்குக் குழுவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற வெளியீடுகள் தொடர் 117 மூலம் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம். 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

1. இலங்கை விமானப் படை

குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
1. அதிகாரிகள் ஓய்வு பெறும்போது, அவர்கள் பங்களிப்பை வழங்க ஆரம்பிக்கும் நேரத்தில் செலுத்துவதாக ஒப்புக் கொள்ளப்பட்ட தொகையைவிட குறைந்த தொகையே விமானப் படைத் தளபதியின் சேமநல நிதியதினால் வழங்கப்படுகிறது.	a. ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தை மீளாய்வு செய்வதற்கென 2019 செப்ரெம்பரில் மீளவும் நியமிக்கப்பட்ட சபையினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின்படி, ஓய்வூதிய நன்மைகள் தற்போது சகல படைச் சேவையினருக்கும் வழங்கப்படுகிறது. மேலும், புதிய ஓய்வூதிய நன்மைத் திட்டத்தின்படி, ஓய்வூதிய நன்மைகளின் நிலுவைகள் 2017 யூலை தொடக்கம் 2019 செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்ற சகல படைச் சேவையினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இத்திட்டத்திற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த படையினருக்கும் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின் பின்னர் செலுத்தப்படும்.
2. இலங்கை விமானப் படையின் ராடர் அலைவாங்கி (LRU 02) மற்றும் அன்ரெனா ஸ்கேனர் (LRU 01) என்பன பழுதுபார்ப்புக்காக அனுப்பப்படும்போது காணாமற் போயிருந்ததன் ஊடாக ரூபா 74.46 மில்லியன் இழப்பு ஏற்பட்டது.	a. காப்புறுதி பெறாததில் சம்பந்தப்பட்ட உத்தியோகத் தரிடமிருந்து ரூபா 173,729.43 தொகை வசூலிக்கப் பட்டுள்ளது. மீதித் தொகை ரூபா 306,094.83 ஆனது 2023 யூலை மாதத்தினுள் வசூலிக்கப்படும். b. சம்பந்தப்பட்ட உருப்படிகளை வெளிநாட்டு பழுதுபார்ப்புக்கு அனுப்புவதற்கான பொறுப்பை ஏற்றிருந்த சரக்கு அனுப்பும் கம்பனியான வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் இடமிருந்து இழப்புத் தொகையின் மீதியான ரூபா 98,194,092.87 (திணைக்களக் கட்டணங்கள் உள்ளிட்ட) இனை வசூலிப்பதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், வழக்கின் பிரித்தெடுப்புகள் சட்ட ஆலோசனைகளுக்காக 2018 இல் சட்டமா அதிபர்

	திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தற்போதைய நிலைமை பற்றி 2020 யூன் 26 ஆந் திகதியிடப்பட்ட SLAF/437/3/Legal/Org இலக்க கடிதத்தின் ஊடாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் விசாரிக்கப்பட்டது ஆயினும் இன்னும் எவ்வித பதில்களும் கிடைக்கப் பெறவில்லை. c. குறித்த சரக்கு அனுப்புநரான வரையறுக்கப்பட்ட கெயார் லொஜிஸ்ரிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
3. ஸ்ரீ லங்கா ஹெலிடுவர்ஸ் லிமிட்டெட் இன் பணிப்பாளர் சபை தொடர்பான சட்ட நிலைமை	a. ஹெலிடுவர்ஸ் லிமிட்டெட் இன் உரிமையினை திறைசேரிச் செயலாளருக்கு மாற்றஞ் செய்யும் பொருட்டு அமைப்பக விதிகளை மீளாய்வு செய்யுமாறு திறைசேரியின் சட்ட ஆலோசகர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அதற்கிணங்க, மீளாய்வு செய்யப்பட்ட அமைப்பக விதிகள் 2019 நவெம்பர் 09 ஆந் திகதி திறைசேரிக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. b. வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி இரண்டாவது தடவையாக அமைப்பக விதிகள் திருத்தஞ் செய்யப்பட்டு அவை திறைசேரியின் அரச முயற்சிகள் திணைக்களத் திடம் சமர்ப்பிக்கப்பட்டன. c. மேலும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம மந்திரியால் வாய்மூலம் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, ஹெலிடுவர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இனை அரசாங்கத்துடன் இணைந்த உள்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்து கம்பனியொன்றாகத் தாபிப்பதற்கு 2020.02.20 ஆந் திகதி அமைச்சரவைப் பத்திரமொன்று பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. d. அதற்கிணங்க, ஹெலிடுவர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் இன் அதிகாரிகள், ஹெலிடுவர்ஸ் (பிரை.) லிமிட்டெட்டை அரசாங்கத்துடன் இணைந்த உள்நாட்டு சிவில்

	விமானப் போக்குவரத்துக் கம்பனி ஒன்றாக தாபிப்பது பற்றிக் கலந்துரையாடுவதற்காக 2020 மார்ச் 13 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத் தைச் சந்தித்திருந்தனர். அந்தக் கலந்துரையாடலின்படி, ஹெலிடுவர்ஸ் (பிரை.) லிமிட்டெட்டிற்காக நிறுவனக் கட்டமைப்பை உள்ளடக்கிய பொருத்தமான வியாபார மாதிரியொன்று தயாரிக்கப்பட்டு 2020.06.08 ஆந் திகதி பாதுகாப்பு அமைச்சின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் அதன் பிரதி ஒன்று திறைசேரியின் அரச முயற்சிகள் திணைக்களத்திடமும் சமர்ப்பிக்கப்பட்டது. e. எனவே, திறைசேரியின் அரச முயற்சிகள் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றிட மிருந்து இரண்டாவது முறையாக திருத்தப்பட்ட அமைப்பக விதிகள் மற்றும் ஹெலிடுவர்ஸ் (பிரை.) லிமிட்டெட் இன் வியாபார மாதிரி ஆகியன தொடர்பான பரிந்துரைகள் நாடப்பட்டுள்ளன.
4. 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை இலங்கை விமானப் படையால் வழங்கப்பட்ட வான் போக்குவரத்திற்காக 2018.12.31 ஆந் திகதியில் வசூலிக்கப்பட வேண்டிய நிலுவையாக ரூபா 14.24 மில்லியன் காணப்படுகிறது.	2018 டிசெம்பர் 31 இல் வான் போக்குவரத்திற்காக வசூலிக்கப்பட வேண்டியிருந்த ரூபா 14.24 மில்லியன் வெளிநின்ற வருமானத்தை வசூலிக்கின்ற நடவடிக்கையின் முன்னேற்றம் பற்றிய விபரம் பின்னிணைப்பு "A" ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
5. கொழும்புப் பகுதியில் தாபிக்கப்பட்ட இலங்கை விமானப் படையின் தீயணைப்பு மற்றும் இடர்மீட்பு அலகின் செயற்பாடுகளை தற்போதைய தேவைப்பாடுகளுடன் சீரமைத்தல்	a. இ.வி.ப. இன் தீயணைப்பு மற்றும் இடர்மீட்பு அலகைத் தாபிப்பதற்காக ஒதுக்கப்பட்ட "பேக்கரியாவத்தை" காணியின் உரிமையாளர்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபையும் இலங்கை புகையிரதத் திணைக்களமும் ஆகும். அவர்கள் அந்தக் காணியின் உரிமையை இ.வி.ப. இற்கு வழங்குவதற்கு சம்மதிக்கவில்லை. இதனால், குறிப்பிட்ட நோக்கத்திற்காக மாற்றுக் காணி ஒன்றை அடையாளங் காண்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. மேற்படி காணியை இ.வி.ப. இற்கு

	விடுவிப்பதற்கு இரு தரப்பினரும் இணங்காததன் காரணமாக வேற்று இடமொன்று தெரிவு செய்யப்பட்டது. எனவே, இலங்கை விமானப் படையின் தீயணைப்பு அலகினைத் தாபிப்பதற்காக தெமட்டகொடை, பேஸ்லைன் வீதியில் அமைந்துள்ள "மஸ்மடுவ வத்தை" காணியிலிருந்து 02 ஏக்கர் காணியை கையகப்படுத்துவதற்கு 2020 யூன் 09 ஆந் திகதியும் SLAF/477/2/ORG இலக்கமும் இடப்பட்ட கடிதத்தின் மூலம் ஆரம்ப முன்மொழிவு பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. b. இ.வி.ப. தீயணைப்பு அலகைத் தாபிப்பதற்காக, இந்தக் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை துரிதப்படுத்தும் பொருட்டு 2020 யூலை 03 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலில், அது தொடர்பான பின்வரும் காரணிகள் கலந்துரையாடப்பட்டன. (1) இ.வி.ப. இன் தீயணைப்பு அலகு முன்னர் தாபிக்கப்பட்ட பேர வாவிக்கு அண்மையில் டி.ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள காணிக்கு அருகாமையிலுள்ள காணியை கையகப்படுத்துவதற்கான சாத்தியத்தன்மை பற்றி ஆராய்வதற்கு அறிவுறுத்தல்கள வழங்கப்பட்டன. (2) பேர வாவிக்கு அண்மையில் விஜயவர்த்தன மாவத்தையில் உள்ள மேற்படி காணியை கையகப்படுத்த முடியாவிடின், நாரஹேன்பிட்டி, கிரிமண்டல மாவத்தையில் நயின்வெல்ஸ் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள காணியி லிருந்து 01 ஏக்கர் காணியை கையகப்படுத்துவதற்கான சாத்தியத்தன்மையை ஆராயுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.
6. இலங்கை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து ரஷ்யாவுக்கு எம்ஐ 17 ரக உலங்குவானூர்திகளின் 05 என்ஜின்களை கொண்டு செல்வதற்கான விலைமனு 2017.04.17 ஆந் திகதி	a. கணக்காய்வுப் புலனாய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டவாறு, பெறுகை வழிகாட்டியின் பந்தி 6.3.6 இன் படி தயாரிக்கப்பட்ட விலைமனு திறத்தல் பற்றிய குறிப்புகள் விலைமனு திறத்தல் செயன்முறையில் பங்குபற்றிய வரையறுக்கப்பட்ட விகின்சா குளோபல் (பிரை.) லிமிட்டெட்டின் ஒரு பிரதிநிதியினால் மாத்திரம் கையெழுத்திடப்பட்டது. எவ்வாறாயினும்,

கோரப்பட்டு, தனியார் கம்பனி ஒன்றுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இக்கம்பனியிடமிருந்து சம்பந்தப்பட்ட சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக மேலதிகமாக ரூபா 1.66 மில்லியன் செலவிடப்பட்டது, விலை அதிகரிப்பு பற்றிய எந்தவொரு கோரிக்கையும் செய்யப்பட முடியாது என விலைமனு ஆவணங்களில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தபோதும் மேலதிகத் தொகையாக ரூபா 1.15 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.	வரையறுக்கப்பட்ட விகின்சா குளோபல் (பிரை.) லிமிட்டெட் தவிர, வரையறுக்கப்பட்ட கிங்ஸ்லொக் சப்ளை சொலூசன் (பிரை.) லிமிட்டெட்டும்கூட அதே ஒப்பந்தத்திற்கான விலைமனுவை அனுப்பியிருந்தது. ஆயினும்கூட, விலைமனு திறக்கும் தருணத்தை அவதானித்தபோது வரையறுக்கப்பட்ட கிங்ஸ்லொக் சப்ளை சொலூசன் (பிரை.) லிமிட்டெட் இன் பிரதிநிதித்துவத்தை தீர்மானிக்க முடியாதிருந்ததுடன் விலைமனு திறக்கும் நேரத்தில் வரையறுக்கப்பட்ட கிங்ஸ்லொக் சப்ளை சொலூசன் (பிரை.) லிமிட்டெட்டிடமிருந்து எந்தவொரு பிரதிநிதித்துவமும் சமூகமளித் திருக்கவில்லை. b. வரையறுக்கப்பட்ட கிங்ஸ்லொக் சப்ளை சொலூசன் (பிரை.) லிமிட்டெட் ஆனது கீழே பட்டியலிடப்பட்டுள்ள சகல 05 விலைமனுக்களுக்காகவும் ஆகக் குறைந்த விலையைக் குறிப்பிட்டிருந்ததுடன் 2017 மே 16 ஆந் திகதி திணைக்களப் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் அதே ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டது. (1) AHQ/17/LS/BRK/1021 (PD/L/BRK/17/10263) (2) AHQ/17/LS/BRK/1027 (PD/L/BRK/17/10264) (3) AHQ/17/LS/BRK/1025 (PD/L/BRK/17/10266) (4) AHQ/17/LS/BRK/1022 (PD/L/BRK/17/10267) (5) AHQ/17/LS/BRK/1026 (PD/L/BRK/17/10268) ன. எவ்வாறாயினும், சரக்கு அனுப்புநரான வரையறுக்கப்பட்ட கிங்ஸ்லொக் சப்ளை சொலூசன் (பிரை.) லிமிட்டெட் ஆனது குறித்த பயண முடிவிடமான SVX (Koltsovo விமான நிலையம்) இற்கு என்ஜின்களை கொண்டு செல்வதற்கான இயலாமை பற்றி அறிவித்திருந்ததுடன் மேற்கூறிய பயண முடிவிடத்திற்கு அண்மை யிலுள்ள மாற்றீடான ஓர் இடமான DME (Domodedovo சர்வதேச விமான நிலையம்) இனையும் வழங்கியிருந்தது. மேலும், பழுதுபார்ப்புக்காக சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு என்ஜின்களை அனுப்புவதற்கு தரைவழிப் போக்குவரத்து உள்ளிட்ட கட்டணமாக என்ஜின் ஒன்றுக்கு தலா ரூபா

229,166.66 வீதம் மேலதிக தொகையைச் சரக்கு அனுப்புநர் குறிப்பிட்டிருந்தார். திணைக்கள பெறுகைக் குழுவும் வான் மற்றும் தரைவழி போக்குவரத்து உள்ளிட்ட சகல 05 என்ஜின்களையும் கொண்டுசெல்வதற்காக மொத்த போக்கு வரத்துச் செலவாக ரூபா 1,145,833.00 இனைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

d. மேற்படி விடயம் தொடர்பில், விலைமனுவானது அடுத்த குறைந்த தொகை மனுச்செய்திருந்த மனுதாரருக்கு வழங்கப்பட்டிருப்பின், ரூபா 1,461,900.98 மேலதிக தொகை செலவுசெய்யப்பட்டிருக்கும். அத்துடன் இ.வி.ப. இன் வான் தொகுதியினரின் வானூர்தி செலுத்தத்தக்க தன்மையை பராமரிப் பதற்காக சொல்லப்பட்ட என்ஜின்கள் பழுதுபார்ப்பின் அவரத் தேவையினைக் கருத்திற்கொண்டு, விலைமனுவானது வரையறுக்கப்பட்ட கிங்ஸ்லொக் சப்ளை சொலூசன் (பிரை.) லிமிட்டெட்டுக்கு வழங்கப்பட்டது.

வ/ப கிங்ஸ்லொக் சப்ளை சொலூசன் (பிரை.) லிமிட்.			வ/ப விகின்சா குளோபல் (பிரை.) லிமிட்.	
ஆரம்ப விலை (ரூபா)	விலை உயர்வு (ரூபா)	இறுதி விலை (ரூபா)	ஆரம்ப விலை (ரூபா)	விலை இடைவெளி (ரூபா)
329,500.00	229,166.66	558,666.66	850,562.13	291,895.47
328,500.00	229,166.66	557,666.66	848,946.58	291,279.92
335,000.00	229,166.66	564,166.66	856,216.57	292,049.91
337,500.00	229,166.66	566,666.66	861,063.00	294,396.34
327,500.00	229,166.66	556,666.66	848,946.00	292,279.34
1,658,000.00	**1,145,833.30**	**2,803,833.30**	**4,265,734.28**	**1,461,900.98**

e. இவ்விடயம் தொடர்பில் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

7. 2018.12.31 இல், மொத்தமாக வெளிநின்ற நிலுவை மீதி ரூபா 17.96	a. 2018 டிசெம்பர் 31 இல் அரச உத்தியோகத்தர்கள் முற்பண 'B' கணக்கின் சிவில் பகுதியினரின் வெளிநின்ற கடன்

மில்லியன் ஆகும் (மாற்றலாகிச்சென்ற அதிகாரிகளின் கடன் மீதிகள் தவிர்ந்தது). மேற்படி மீதிகளை வசூலிப்பதற்குப் பின்பற்றப்படும் செயன்முறை குறிப்பிடத்தக்களவு பலவீனமாக உள்ளது.	மீதியான ரூபா 17,963,767.98 ஆனது 2020 யூன் 30 இல் ரூபா 12,471,353.59 ஆகக் குறைக்கப்பட்டது. மீதி நிலுவைகளையும் வசூலிப்பதற்கு தொடர்ச்சியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. b. மேலும், அரச உத்தியோகத்தர்களின் முற்பண 'B' கணக்கில் உள்ள சேவைத் துறையினரின் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக வசூலிக்கப்படாதிருக்கின்ற 2018 டிசெம்பர் 31 இல் உள் உள்ளபடியான மீதி ரூபா 609,917.91 ஆனது 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முற்றாக வசூலிக்கப்பட்டுள்ளது.
8. இலங்கை விமானப் படைக்கு வைத்தியர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறை	தற்போது, பின்வரும் திட்டங்களின் கீழ் இ.வி.ப. இற்கு வைத்தியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றனர். a. KDU இலிருந்து MBBS பட்டம் பெற்ற பட்டதாரிகள் b. உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து MBBS பட்டம் பெற்ற பட்டதாரிகள் c. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து MBBS பட்டம் பெற்ற பட்டதாரிகள் (முன்-உள்ளுறை மருத்துவப் பயிற்சி)

Deepika Buddhadasa
Chief Financial Officer-I
Ministry of Defence
Defence Headquarters Complex
Sri Jayawardenepura
Kotte.